# ஈழநாதம்

Eelanatham மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - iv

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | மாசி - 23 | 07-03-2003 | வெள்ளிக்கிழமை | ஓசை 17



தரமான முறையில் படப்பிடிப்புக்களுக்கு நாடவேண்டிய இடம்

தாசன் போட்டோ அன் வீடியோ

பிரதான வீதி, இராமநாதபுரம், கிளிநொச்சி


# பால் விவகாரம் தொடர்பான உபகுழுவின் முதலாவது கூட்டத்தில் 12 தீர்மானங்கள்

## முக்கிய செயலகம் கிளிநொச்சியில் அமையும்

(கிளிநொச்சி)

**கிளிநொச்சியில் நேற்று நடைபெற்று முடிந்த பால் விவகாரம் தொடர்பான உபகுழுவின் முதலாவது கூட்டத்தில் முக்கியமான தீர்மானங்கள் சில எடுக்கப்பட்டுள்ளன. இத்தீர்மானங்களில் உபகுழுவிற்கான முக்கிய செயலகத்தை கிளிநொச்சியில் அமைப்பது சிரானுடன் இணைந்து செயற்படுவது உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் இடம்பெற்றுள்ளன.**

இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

நேற்று முன்தினம் முதல் நாள் இடம்பெற்ற உபகுழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதிநிதிகளுடன் நேற்றைய கூட்டத்தில் திருமதி. அடேல் பாலசிங்கமும் கலந்து கொண்டார்.

☐ ஐந்து பிரதிநிதிகளைக் கொண்ட இருகுழுவினரும் பால் விவகாரம் தொடர்பான உபகுழுக் கூட்டங்களுக்கு தேவையேற்படும் பட்சத்தில் தமக்கென இரண்டு ஆலோசகர்களைக் கொண்டு வரமுடியும்.

☐ கிளிநொச்சியில் உபகுழுவுக்கான முக்கிய செயலகமும், கொழும்பில் ஒரு அலுவலகமும் அமைக்கப்படும். இவை இரண்டும் உபகுழு

(IV ஆம் பக்கம் பார்க்க)



உபகுழுவில் கலந்து கொண்ட நோர்வே அரச பிரதிநிதியான கலாநிதி அஸ்ரிட் கைபேக்கிற்கு கைலாகு கொடுக்கும் செல்வி தமிழினி.

## திருமலை-சாந்தி நகரில் 3 இளைஞர்களின் மரணங்கள் கொலையெனத் தீர்ப்பு

### – பொலிசாரை அடையாள அணிவகுப்பில் நிறுத்தவும் பணிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை சாந்தி நகரில் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் நடைபெற்ற ஹர்த்தாலின்போது நடத்தப்பட்ட குண்டு வீச்சினால் கொல்லப்பட்ட மூன்று தமிழ் இளைஞர்களின் மரணங்கள் கொலை எனத் தீர்ப்பளிக்கப் பட்டுள்ளது.

இவர்களின் மரணம் தொடர்பான விசாரணை திருகோணமலை நீதவான் எஸ். தியாகேந்திரன் தலைமையில் நடைபெற்றபோதே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த மரணங்கள் பொலிசாரின் குண்டு வீச்சினால் இடம்பெற்றன என்று சாட்சியங்களின் மூலம் தெரியவந்ததை அடுத்து அன்றைய தினம் சாந்திநகர்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர் படகு மீது முல்லைக் கடலில் கடற்படை பீரங்கித் தாக்குதல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் நேற்று மாலை 5 மணியளவில் சிறிலங்கா 'டோறா' படகுகள் தாக்குதல் நடாத்தியுள்ளன.

நேற்று அதிகாலை 4.00 மணியளவில் மீன்பிடிக்கவென மூன்று மீனவர்களுடன் சென்ற படகு மீளக் கரைக்கு திரும்பாததை அடுத்து பிற்பகல் 4.00 மணியளவில் அதனைத் தேடிச் சென்ற படகுமீது சிறிலங்கா கடற்படையின் மூன்று 'டோறா' படகுகள் சகிதம் வந்த பீரங்கிப்படகு தாக்குதலை நடத்தியுள்ளது.

படகைத் தேடிச் சென்ற மீன்பிடிப்படகும் மீனவர்கள் நால்வரும் தப்பி வந்துள்ளனர்.

மீன்பிடிக்கச் சென்ற படகு மாலை 6.00 மணியளவில் மீளக் கரை சேர்ந்துள்ளது. சிறிலங்கா கடற்படையினரின் இத்தகைய செயற்பாட்டால் கடற்றொழிலாளர்கள் அச்சமடைந்துள்ளனர்.

### - புலிகளுக்கு ஒலிபரப்புச் சாதனம் பெற்றுக் கொடுத்தது குறித்து

## தூதுவர் வெஸ்பேர்க், அமைச்சர் இம்தியாஸ் மேல் நீதிமன்றில் ஆஜராகப் பணிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஒலிபரப்புச் சாதனங்களைப் பெற்றுக் கொடுத்தமை, வானொலிச் சேவையை நடத்துவதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கியமை தொடர்பான விளக்கமளிக்க எதிர்வரும் 31 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கிற்கும் ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காருக்கும் மேல் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

தேசிய சங்கத்தைச் சேர்ந்த பியசேன தசநாயக்க, ஜெயதிலக ஆகிய இருவரும் தாக்கல் செய்திருந்த மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட வேளையில் மேல் நீதிமன்ற நீதியரசர் இவ் அழைப்பாணையை விடுத்துள்ளார்.

மனுதாரர்கள், விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்டுள்ள வானொலி அனுமதிப்பத்திரத்தை தமது மனுவில் கோரியுள்ளதுடன் பிரதிவாதிகளாக சுங்கத் திணைக்கள பணிப்பாளர் மக்கள் தொடர்பாடல் அமைச்சின் செயலாளர் குமார் அபேசிங்க, விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலர் புலித்தேவன் ஆகியோரைக் குறிப்பிட்டுள்ளனர்.

## ஆசிய அ.வ.தலைவர் கிளி. வருகிறார் புலிகளையும் இன்று சந்திப்பார்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் இன்று கிளிநொச்சிக்கு வருகைதரவுள்ளார். இவர் இன்று காலை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்திக்கவுள்ளார். அத்துடன் கிளிநொச்சி பொது மருத்துவ மனைக்கான அடிக்கல்லை நாட்டி வைப்பார். தொடர்ந்து கிளிநொச்சி அரச செயலகத்தில் நடைபெறவுள்ள வட மாகாண அரச அதிபர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுடனான சந்திப்பில் கலந்து கொள்வார்.

பின்னர் கிளிநொச்சி மத்திய கல்லூரியைச் சென்று பார்வையிடுவதுடன் ஆனையிறவு வரையான பிரதான பாதையையும் பார்வையிடுவார். அத்துடன் கிளிநொச்சி அரச செயலகத்தில் நடைபெறும் பத்திரிகையாளர் மாநாட்டிலும் கலந்து கொள்வார் என தெரிவிக்கப்படுகிறது. (பா)

## பிடிக்கப்பட்ட தமிழக மீனவர் தமிழகத்திற்கு அனுப்பிவைப்பு

(கொழும்பு)

இலங்கை மீனவர்களினால் பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களில் 93பேர் நேற்றுக் மாலை இலங்கை கடற்படையினரால் தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில நாட்களில் 117 இந்திய மீனவர்கள் இலங்கை மீனவர்களால் பிடிக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 12 படகோட்டிகளை வரும் 20ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிபதி பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

நேற்று மாலை 4.00 மணியளவில் சிறிலங்கா கடற்படையினரால் இந்திய கடலோர காவல் படையினரிடம் இவர்கள் 93 பேரும் ஒப்படைக்கப்பட்டனர். இக் கைகலப்பில் காயமடைந்தவர்களும் குணமடைந்துள்ளனர். ஒருவர் மட்டும் தற்போதும் மன்னார் வைத்திய சாலையில் தங்கி சிகிச்சை பெற்று வருகிறார்.

## அமைச்சர் பீரிஸ் நாளை வவுனியா விஜயம்

(கொழும்பு)

அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நாளை வவுனியா வரவுள்ளார்.

பீரிஸ் முதன் முதலாக வவுனியாவிற்கு விஜயம் செய்வதால் அவருக்குப் பெரும் வரவேற்பளிக்க ஏற்பாட்டாளர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். இவர் வர்த்தக சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசவுள்ளதாக வவுனியா வர்த்தக சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

## வரிவிளம்பரம்

### வெளிவந்துவிட்டது

"பொது அறிவு - தேடலும் தெளிவும் - 2003" 2002/2003 கால மிக முக்கிய விடயங்கள், சமகால தகவல்களுடன் A/L -2003 பரீட்சைக்கும் சகல போட்டிப் பரீட்சைகளுக்கும். வவுனியாவில் - எல்லா புத்தகசாலைகளிலும் வன்னியில் - அறிவமுது பொத்தக சாலைகளிலும் (பிரதிகள் மிகக் குறைவு. முந்துங்கள்)

விலை - 42/= (2996)


### விசேட பொதுக்கூட்டம்

கிளி/கனகபுரம் ம.வி. பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் 10-03-2003 அன்று பி.ப. 3.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளதுடன் இக்கூட்டத்திற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. அரியரத்தினம் அவர்கள் கலந்து கொள்வதால் சகல பழைய மாணவர்களையும் தவறாது சமுமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். செயலாளர் அ. றெஜி அலோசியஸ். (3001)

# நாடற்றவர் பிரச்சினையைத் தீர்ப்பதில் அரசாங்கம் இழுத்தடிக்கிறது

## – இல. தொ. ஐக்கிய முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

எதிர்க்கட்சியின் ஆதரவுடன் இந்திய வம்சாவளி மக்களின் பிரஜாவுரிமைப் பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடிய சூழல் காணப்பட்ட போதிலும் அரசாங்கம் சமர்ப்பிக்கும் திருத்தங்களை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டுமெனக் கோரி இழுத்தடிப்புச் செய்வதைக் கண்டிப்பதாக இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான S. சதாசிவம் தெரிவித்துள்ளார்.

1964இல் நிரந்தரமான வதிவிடத்தைக் கொண்ட சகலரும் இலங்கைப் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இதன் மூலம் எந்தவொரு நபரும் எதிர்காலத்தில் நாடற்றவர்களாகக் கருது வதற்கு இடமில்லை. இந்த திருத்தச் சட்டமூலத்தை வைத்துக் கொள்வதன்மூலம் இலங்கையில் கடந்த 50 வருடங் களாக நிலவி வந்த நாடற்றவர் பிரச்சினைக்கு நிரந்தரமாக முற்றுப் புள்ளி வைப்பதற்கு வழி ஏற்படும் என்பதனாலேயே இந்தப் பிரஜாவுரிமை திருத்தச் சட்ட மூலத்தைத் தான் சமர்ப்பித்ததாகவும் இதற்கு மக்கள் விடுதலை முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட சகல எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்திருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.


## காணி குத்தகைக்குத் தேவை

கிளிநொச்சி நகரின் மையத்திலிருந்து மூன்று (03) கிலோமீற்றர் சுற்றளவினுள் அண்ணளவாக ஒரு ஏக்கர் அளவுள்ள வெற்றுக்காணி, தமிழீழ வைப்பகத்தின் பயன்பாட்டிற்குத் தேவையாகவுள்ளது. கிணறு இருத்தல் விரும்பத்தக்கது. காணியைக் குத்தகைக்கு வழங்க விரும்புவோர் திருநகர், கிளிநொச்சி என்னும் முகவரியில் இயங்கும் தமிழீழ வைப்பக நடுவப்பணியகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். ஏனைய விளக்கங்கள் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஆளுகை மேலாளர்,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி-7698)



## 90ஆம் நாள் நினைவில்

07-05-2003

தாய் மண்ணில் மலர்வு
1973 □ 09 □ 26



அந்நிய மண்ணில் உதிர்வு
2002 □ 12 □ 08

### அமரர் கனகரத்தினம் கணேசகுமார்

"குடும்பத்தின் குல விளக்கே!
குமரபுரத்தின் மைந்தனே!
தம்பியாக, நண்பனாக
யாரவருக்கும் நல்லவனாய்
நானிலத்தில் வாழ்ந்தாய்
நல்லவனை எமையாளும்
நாயகன் அழைத்திட்டான்
விண்ணுலகத்திற்காய்"

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு"

என்றும் உனது ஆத்ம சாந்திக்காக வேண்டும்,
**பணிப்பாளர்களும், பணியாளர்களும்,**
கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கம்,பரந்தன்.

(3002)


## யாழ். இல் மாநாடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களுக்கான மாநாடு யாழ். மாவட்டத்தில் நடைபெற்றது.

வட -கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் நடந்த இம்மாநாட்டில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் எதிர்காலத்தில் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டிய திட்டங்கள், முன்மொழிவுகள் தொடர்பாகவும் மற்றும் நிர்வாக விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன. (23)


## ஏல விற்பனை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் பாவனைக்கு உட்படுத்தப்பட்ட கீழ்வரும் பொருட்கள் ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

01. டீசல் இயந்திரம் (லேடன், இசுசு, போர்ட், லிஸ்ட்டர், ரஸ்டர்)
02. மின் பிறப்பாக்கிகள் (50 K.V, 40 K.V, 35 K.V, 15 K.V) மின் உபகரணங்கள்.
03. வாகன உதிரிப்பாகங்கள்.
04. வாகனம் ஆட்டோ.
05. கோழித்தீன், இனிப்புவகை உற்பத்தி செய்யும் உபகரணங்கள், உணவக உபகரணங்கள், அச்சகப் பொருட்கள், காகிதாதிகள், அலுவலகத் தளபாடங்கள், இரும்புக் கதிரைகள்.

இவற்றினைப் பார்வையிட விரும்புவோர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், நடுவப்பணியகம், வட்டக்கச்சி / பல்லவன் அரைக்கும்ஆலை, கணேசபுரம் ஆகிய இடங்களில் 07.04.2003 - 09.04.2003 வரை பார்வையிடலாம்.

** ஏலவிற்பனை 10.03.2003 திங்கள், 11.03.2003 செவ்வாய் ஆகிய தினங்களில் காலை 10.00 மணிக்கு மேற்குறிப்பிட்ட இடங்களில் இடம்பெறும். (சி-7700)



## பணிநிலை வேண்டுகை

திரைப்படவெளியீட்டுப்பிரிவில் கீழ்க்காணும் பணிநிலைக்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**பணிநிலைகள்** :-
01. கணக்குப் பதிவாளர்கள்
02. தொடர்பாளர்கள்
03. திரையரங்குப் பரிசோதகர்கள்
04. உதவியாளர்கள்.

**வயது** :- 18இல் இருந்து 30 வயது வரை

**தகைமை** :- ஆண்டு 09,10,11 வரை படித்த ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பங்கள் சேர்க்க வேண்டிய முகவரிகள்:-
01. திரைப்பட வெளியீட்டுப் பிரிவுத் தொடர்பகம் - கிளிநொச்சி
02. " " " - கந்தபுரம்
03. " " " - முழங்காவில்
04. " " " - பள்ளமடு
05. " " " - துனுக்காய்
06. " " " - கனகராயன்குளம்
07. " " " - விசுவமடு
08. " " " - புதுக்குடியிருப்பு
09. " " " - முள்ளியவளை
10. " " " - பளை.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 20.03.2003இற்கு முன் கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

திரைப்படவெளியீட்டுப் பிரிவு,
அரசியல்துறை,
தமிழீழம்.

(சி-7804)



## 3ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு
20 - 02 - 1975



வீரச்சாவு
09 - 03 - 2000

### மேஜர் இளங்கோவன் / இலங்கேஸ்

-சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி-
(கிருஸ்ணசாமி வசீகரலிங்கம்)
இடைக்காடு, அச்சுவேலி

புயலென வீசிய தென்றல் -கொள்கையில்
மலையென நின்ற செம்மல்
நிரையென வந்த படையின்
கதையினை முடித்த வீரன்
ஓயா அலையென வீசிய புலியோன்
உமையாள் புரத்தின் சமரில்
உயிரைக் கொடுத்த வள்ளல்
உன்னை நினையா நின்ற நாளோ
நாம் மறவா நின்ற நாளே.

இடைக்காடு,
அச்சுவேலி.

-குடும்பத்தினர்.

(2913)

# வடக்கு-கிழக்கு பாடசாலைகளை புனரமைக்க 240 கோடி ரூபா தேவை

## – மாகாணக் கல்வி அமைச்சு மதிப்பீடு

(திருகோணமலை)

**வடக்கு-கிழக்கு மாகாணத்தின் இரு தசாப்தங்களுக்கு மேலாக யுத்தம் காரணமாகப் பாதிப்புற்றுள்ள பாடசாலைகளின் புனரமைப்புக்காக 240 கோடி 15 இலட்சம் ரூபா தேவைப்படுவதாக மாகாணக் கல்வி அமைச்சு மதிப்பிட்டுள்ளது.**

இத்தொகையில் பாடசாலைப் புனரமைப்புக்கு 189, 801,000 ரூபாவும், மலசல கூடவசதிக்கு 23, 571,000 ரூபாவும்,தளபாடக் கொள்வனவிற்காக 22,543,000 ரூபாவும், குடிநீர் வசதிக்கு 4,135,000 ரூபாவும் என அந்த மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத் தீவு, கிளிநொச்சி ஆகிய 08 மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளையுமே புனரமைக்க இத் தொகை தேவைப்படுவதாக மாகாணகல்வி அமைச்சுத் தெரிவித்துள்ளது.

சிறிலங்கா அரசாங்கங்களினால் கடந்த பல வருடங்களாக வடக்கு-கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பல இராணுவ நடவடிக்கைகளினாலும் விமான மற்றும் எறிகணைத் தாக்குதல்களினாலும் இப்பாடசாலைகள் சேதமடைந்துள்ளன.

## - சிறிலங்கா சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி -

# கூட்டணி தொடர்பான உடன்பாடு இன்னமும் பூர்த்தியாகவில்லை!

கூட்டணி ஒன்றை அமைப்பது தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையே உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்திக்கொள்வதற்கான நடவடிக்கைகள் இன்னும் பூர்த்தியாகவில்லை என பொ.ஐ.முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்வதற்காக முதற்கட்ட நடவடிக்கைகள் நேற்று முன்தினம் பூர்த்தியடையும் என எதிர்பார்த்த போதும்அது சாத்தியப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பி.யும் மீண்டும் இந்த வாரம் மற்றுமொரு பேச்சுவார்த்தையை நடத்தவுள்ளன. இதேவேளை, இரு கட்சிகளுக்குமிடையே பொது உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பாக முன்னெடுக்கப்படும் முதற்கட்ட நடவடிக்கைகள் வெற்றிகரமாக இடம்பெறுவதாக ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச கூறுகின்றார். இவ்விடயம் தொடர்பாக மீண்டும் பேச்சுவார்த்தை தொடரும் என அவர் தெரிவித்துள்ளார்.

## கிளிநொச்சி மாவட்ட வதிவிட வேளாண்மைப் போட்டி


(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் நடாத்தப்படும் 2001-2002ஆம் ஆண்டுக்கான வதிவிட வேளாண்மை மற்றும் சிறந்த நெற் செய்கையாளர் தெரிவுப் போட்டிகளில் வெற்றியீட்டியோர்க்கான கௌரவிப்பு நிகழ்வு வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ள மேற்படி விழாவில் சகலரும் கலந்து வெற்றியீட்டிய விவசாயிகளைக் கௌரவித்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் கிளிநொச்சி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் வேண்டுகை விடுத்துள்ளனர். (சோ)



ஈராக் மீதான போருக்காக துருக்கிக்குச் செல்லவென அமெரிக்கா குவைத்தில் நிறுத்தி வைத்துள்ள நீரூந்து விரைவுக் கப்பலைக் காணலாம்.



தென்கொரிய - அமெரிக்க படையினர் கூட்டு இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

# சிறிலங்கா பொலிசாருக்கு ஒழுக்க நெறிக்கோவை!

(கொழும்பு)

சிறிலங்கா பொலிஸ் துறையில் முதல் தடவையாக சத்தியப்பிரமாண உறுதி மொழியையும், ஒழுக்க நெறிக் கோவைகளையும் உருவாக்கப் போவதாக பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜா கூறியுள்ளார்.

இந்த நடைமுறைகள் அமுலாகும் பட்சத்தில் மோசடிச் செயல்களில் ஈடுபடும் பொலிஸ் அதிகாரிகளுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வழிபிறக்கும்.

65 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உத்தியோகஸ்தர்கள் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளும் நிகழ்வு நாளை பொலிஸ் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது. பின்னர் இது நாட்டின் ஏனைய பாகங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என பொலிஸ்மா அதிபர் மேலும் கூறியுள்ளார்.

# 'சுப்பர்சிக்ஸ்' போட்டிகள் இன்று ஆரம்பம்!

உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியின் முதற்சுற்று இறுதி ஆட்டங்கள் முடிவடைந்த நிலையில் அடுத்த கட்ட 'சுப்பர் சிக்ஸ்' போட்டி இன்று முதல் ஆரம்பமாகவுள்ளது.

'ஏ' பிரிவிலிருந்து அவுஸ்திரேலியா, இந்தியா, சிம்பாப்வே அணிகளும், 'பி' பிரிவிலிருந்து சிறிலங்கா, கென்யா, நியூசிலாந்து அணிகளும் 'சுப்பர்சிக்ஸ்' போட்டிகளுக்குத் தகுதி பெற்றுள்ளன.

'சுப்பர்சிக்ஸ்' போட்டிகள் பின்வரும் ஒழுங்கில் நடைபெறவுள்ளன.

- ★மார்ச் 7 இந்தியா - கென்யா, அவுஸ்திரேலியா - சிறிலங்கா
- ★மார்ச் 8 சிம்பாப்வே-நியூசிலாந்து
- ★மார்ச் 10 இந்தியா - சிறிலங்கா
- ★மார்ச் 11 அவுஸ்திரேலியா - நியூசிலாந்து
- ★மார்ச் 12 சிம்பாப்வே - கென்யா
- ★மார்ச்14 இந்தியா - நியூசிலாந்து
- ★மார்ச் 15 சிம்பாப்வே - சிறிலங்கா , அவுஸ்திரேலியா - கென்யா.

# ஈராக் மீதான தாக்குதலுக்கு அரபுலீக் எதிர்ப்பு

ஈராக் மீதான இராணுவத்தாக்குதலுக்கு அரபுலீக் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. ஐ.நா. கண்காணிப்புக்குழுவினருடன் சதாம் ஹுசைன் முழுமையாக ஒத்துழைக்க வேண்டும் என்றும் அது மேலும் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த அரபுலீக் மாநாட்டுக்கு பஹ்ரெய்ன் தலைமை தாங்குகின்றது. ஈராக் மீதான இராணுவத் தாக்குதலுக்கு அரபுலீக் நூற்றுக்கு நூறு வீதம் எதிர்ப்புத் தெரிவிக்கின்றது என்று தெரிவித்துள்ள அரபுலீக் கின் பிரதம செயலாளர் அம்ர்மூஸா, யுத்தம் எந்த வடிவில் ஏற்பட்டாலும் வளைகுடாவில் யுத்தமொன்றை நடத்துவதற்கு அரபுலீக் எதிர்ப்புத் தெரிவிக் கின்றது.

ஈராக்கில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ள ஐ.நா.கண்காணிப்புக் குழுவினருக்கு மேலதிக காலம் வழங்கப்பட வேண்டும் என்றும் அரபுலீக் கேட்டுக் கொள்கின்றது. என்று அம்ர்மூஸா தெரிவித்துள்ளார்.

ஈராக்மீதான யுத்தமென்பது நீதியற்றதும், ஒருபக்கச் சார்பானவையாகவுமே அரபுலீக் கருதுகின்றது என்றும் அம்ர் மூஸா தெரிவித்துள்ளார்.

# 'அல்சமுத்' ஏவுகணைகளை அழிப்பதால் எமது திறன் குறைந்து விடவில்லை

## –ஈராக் சனாதிபதி சதாம் ஹுசைன்

(பாக்தாத்)

ஈராக் அதன் நவீனரக அல்சமுத் ஏவுகணைகளை அழிப்பதனால் அமெரிக்காவின் தாக்குதலிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் திறன் குறைந்து விடவில்லை என்று ஈராக்கிய சனாதிபதி சதாம்ஹுசைன்கூறியுள்ளார்.

காலால் நடமாடும் யுத்த வீரனும் தரையில் செல்லும் தாங்கிகளுமே யுத்தத்தின் முடிவைத் தீர்மானிப்பவையாகும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

120 அல்சமுத் ஏவுகணைகளை அழிக்கும் நடவடிக்கைகள் கடந்த சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டதையடுத்து சதாம் வெளியிட்டுள்ள முதற்கருத்து இதுவாகும்.

# பயணிகள் பேருந்தில் குண்டு வெடிப்பு. இஸ்ரேலில் 15பேர் பலி; 40பேர் காயம்!

(டெல்அவிவ்)

இஸ்ரேலில் பலஸ்தீன தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதலில் 15பேர் கொல்லப்பட்டதுடன் 40 பேர் காயமடைந்துள்ளனர்.

பயணிகள் நிறைந்த பேருந்து ஒன்றில் இந்தக் குண்டு வெடித்துள்ளது. கடந்த இரண்டு மாதங்களில் இஸ்ரேலில் இடம்பெற்ற முதலாவது பலஸ்தீன குண்டுத் தாக்குதல் இதுவாகும்.

மத்திய கிழக்கில் காஸா நிலப்பரப்பில் வடபகுதியில் இஸ்ரேலிய ஹெலிகள் நேற்று 05 ஏவுகணைகளை வீசியுள்ளன. இஸ்ரேலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பலஸ்தீன தற்கொலைக் குண்டுதாரியின் குண்டுத்தாக்குதலை அடுத்தே இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தீவிரவாத ஊடுருவல்களை நிறுத்துமாறு அமெரிக்கா தொடர்ந்து வற்புறுத்துகிறது

## சனாதிபதி புஷ், வாஜ்பாயிடம் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

காஷ்மீருக்குள் முஸ்லிம் தீவிரவாதிகள் ஊடுருவுவதை நிறுத்துமாறு பாகிஸ்தானுக்கு தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்து வருவதாக அமெரிக்க சனாதிபதி புஷ் இந்தியாவிற்கு உறுதியளித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் அமெரிக்க சனாதிபதி புஷ் தொலைபேசியில் பேசியுள்ளார். ஈராக் மீதான இராணுவ நடவடிக்கையை அங்கீகரிக்கும் ஐக்கிய நாடுகளின் புதிய தீர்மானம் தொடர்பாகவே புஷ் இந்தியப் பிரதமருடன் பேசியுள்ளார். காஷ்மீருக்குள் இஸ்லாமிய தீவிரவாதிகளின் ஊடுருவல்களை நிறுத்துமாறு அமெரிக்கா - பாகிஸ்தானுக்கு அழுத்தம் கொடுக்கத் தவறிவிட்டதாக கடந்த திங்கட்கிழமை வாஜ்பாய் குற்றம் சாட்டியிருந்தார். இந்நிலையிலேயே தீவிரவாதிகள் ஊடுருவல் விடயத்தில், பாகிஸ்தானுக்கு அமெரிக்கா தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருவதாக சனாதிபதி புஷ் உறுதியளித்துள்ளார்.

காஷ்மீருக்குள் தீவிரவாதிகள் ஊடுருவுவதை நிறுத்திக் கொள்வதாக கடந்த வருடம் பாகிஸ்தான் உறுதியளித்திருந்த போதிலும் ஊடுருவல்கள் தொடர்வதாக இந்தியா குற்றம் சாட்டியுள்ளது.



வவுணதீவு முகாம் தாக்குதலின் ஆறாம் ஆண்டு நினைவு நிகழ்வும், இம்முகாம் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட 103 மாவீரர்களின் நினைவுத் தூபி திறப்பும்

## வவுணதீவு படைமுகாம் தகர்ப்பு

# ஆறாவது ஆண்டு நிறைவு நிகழ்வும் மாவீரர்களின் நினைவுத்தூபி திறப்பும்

(மட்டக்களப்பு)

வவுணதீவு படைமுகாம் தகர்ப்பின் 6 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்றது. பிரதான நிகழ்வு தரவையில் இடம்பெற்றது.

மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஸ் தமிழீழ தேசியக் கொடியையும், மதனா படையணிக் கொடியை தளபதி கேணல் கருணாவும் ஏற்றி வைத்தனர். பிரதான ஈகச்சுடரை மகளிர் படையணித் தளபதி நிலாஜினி, மதனா படையணித் தளபதி சாவித்திரி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

முகாம் தகர்ப்பில் வீரச்சாவடைந்த 103 மாவீரர்களின் உருவப்படங்களை பிராந்திய அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், பீரங்கிப் படையணி தளபதி இலங்கேஸ், அன்பரசி படையணித் தளபதி வினோதன் படையணித் தளபதி பாப்பா, விசாலன் படையணித் தளபதி ஜீவேந்திரன், பிராந்திய பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் நிசாம் ஆகியோர் திரைநீக்கம் செய்து வைத்தனர்.

மேலும், விளையாட்டுப் போட்டிகளும், கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. அத்தோடு பாடசாலை மாணவரிடையிலான பொது அறிவுப் போட்டிகளும் இடம்பெற்றன.

# மட்டு. இல் தொண்டர் ஆசிரியர் சுழற்சி முறையில் உண்ணாவிரதம்

(மட்டக்களப்பு)

நிரந்தர நியமனம் கோரி மூன்று தினங்களாக சத்தியாக்கிரக போராட்டத்தினை மேற்கொண்டிருந்த மட்டு - அம்பாறை மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் நேற்று தமது போராட்டத்தை விரிவுபடுத்தியுள்ளனர்.

இதன்பிரகாரம் இவர்கள் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று முதல் ஆரம்பித்துள்ளனர்.

தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்காது அரசு பின்னடித்து வருகின்றமை தமிழ் மக்களின் கல்வியைப் பாழடிக்கும் செயல் என்று வடக்கு - கிழக்கு தொண்டர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

திருகோணமலையில் உள்ள கல்வி அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்றுவரும் உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பாக வடக்கு - கிழக்கு தொண்டர் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள மனுவிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி தொடர்ச்சியான 03 நாள் போராட்டம் நேற்று மாலையுடன் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது. தமது கோரிக்கைக்கு அடுத்த 05 நாட்களுக்குள் சாதகமான முடிவுகள் எட்டப்படாதவிடத்து 11.03.2003இன் பின் தொடர்ச்சியான மறியல் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக கிளிநொச்சி கல்வி வலய தொண்டர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று மூன்றாவது நாளாக கிளி. அரச செயலகத்தில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட தொண்டர் ஆசிரியர்களை உலக வங்கி பிரதிநிதி சந்தித்துக் கலந்துரையாடல் ஒன்றை நடாத்தியுள்ளார்.

## கருத்தரங்கு

(மல்லாவி)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு துணுக்காய் பிரதேச அரசியல்துறையின் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை மல்லாவி மத்திய கல்லூரியிலும், யோகபுரம் மகா வித்தியாலயத்திலும் கருத்தரங்கு இடம் பெற்றது.(07)

## பால் விவகாரம்....

உறுப்பினர்களின் பணிகளில் உதவுவதற்காக நெருக்கமாக ஒன்றிணைந்து செயற்படும்.

☐ மேற்குறிப்பிட்ட இவை இரண்டுக்குமான அலுவலர்களை நியமிப்பது, அவர்களின் எண்ணிக்கை, செயற்பாடு ஆகியன தொடர்பான தமது கருத்துக்களை அடுத்த சந்திப்பில் இரு தரப்பினரும் முன்வைப்பர்.

☐ இதனது செயற்பாடுகளுக்கு பல்வேறுபட்ட சர்வதேச உதவி வழங்கும் நாடுகள், அமைப்புக்களிடமிருந்து நிதியுதவியைப் பெற்றுக்கொள்ளுதல்.

☐ இந்த உபகுழுவானது 2003 ஏப்ரலில் நடைபெறவுள்ள உயர்மட்டப் பேச்சுக்களில் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும்.

☐ இந்த உபகுழுவானது ஏனைய உபகுழுக்களுடனும் சமாதான நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட ஏனைய அமைப்புக்களுடனும் பெண்கள் தொடர்பான பிரச்சினைகளை அவர்களது நடவடிக்கைகளில் சேர்த்துக் கொள்வதற்காக கலந்துரையாடல்களை மேற்கொள்வதுடன் நெருக்கமான தொடர்புகளையும் பேணும்.

☐ பால் விவகாரம் தொடர்பான கீழ்வரும் விடயங்களில் இந்த உபகுழு அதிகூடிய கவனஞ் செலுத்தும்.

- சமாதான முயற்சிகளைத் தக்கவைத்தல்.
- மீள்குடியேற்றம்
- தனிநபர் பாதுகாப்பு
- உள்ளகக் கட்டமைப்பும் சேவைகளும்
- ஜீவனோபாயமும் தொழில் வாய்ப்பும்
- அரசியல் பிரதிநிதித்துவமும், தீர்மானமெடுத்தலும்
- இணக்கப்பாடு

☐ 'சிரான்' யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளவுள்ள துரிதப்படுத்தப்பட்ட மீள்குடியேற்றத் திட்டம், மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளவுள்ள அதிவேக மீள்குடியேற்றத் திட்டம் ஆகியவற்றுடன் வட - கிழக்கில் தற்போது நடைமுறையிலுள்ள மீள்குடியேற்றத் திட்டங்களுடனும் எமது உபகுழுவானது இணைந்து செயற்படும்.

☐ கிழக்கில் இடம்பெற்றுவரும் மீள்குடியேற்றத் திட்டத்தைச் செயற்படுத்த 'சிரான்' இற்கு உத்வேகமளிப்பது.

☐ கிளிநொச்சியில் உளநலம் பாதிக்கப்பட்ட பெண்கள் தொடர்பாக சிரான் மேற்கொள்ளவுள்ள திட்டத்திற்கு ஆதரவளிப்பதுடன் போரினால் பாதிக்கப்பட்ட ஏனைய மாவட்டங்களிலும் அவ்வாறான நிலையங்களை அமைப்பதற்கு சிரானுக்கு ஊக்கமளித்தல்.

☐ ஏனைய உபகுழுக்களிற்கு பால் விவகாரம் தொடர்பான திட்டங்களை உருவாக்க வழிகாட்டுதல்.

☐ இந்த உபகுழுவின் அடுத்த சந்திப்பு 04, 05 ஏப்ரலில் கிளிநொச்சியில் இடம்பெறும். இருப்பினும் சமாதானத்தின் முன்னேற்றத்தைப் பொறுத்தே எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள சந்திப்புக்களுக்கான இடங்கள் பற்றித் தீர்மானிக்கப்படும்.

## சுப்பர் சிக்ஸிற்குள்

# பிரவேசித்துள்ள அணிகள் பெற்றுள்ள போனஸ் புள்ளிகள்

2003 உலகக் கிண்ண கிரிக்கட் போட்டிக்கான முதல் சுற்று போட்டிகள் நிறைவு பெற்று 'சுப்பர் சிக்ஸ்' போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

இந்நிலையில் ஒவ்வொரு அணியும் சுப்பர் சிக்ஸிற்கு போனசாக எடுத்துச் செல்லும் புள்ளிகளின் விபரம் வருமாறு:

அவுஸ்திரேலியா 12 புள்ளிகள், கென்யா 10 புள்ளிகள், இந்தியா 8 புள்ளிகள், சிறிலங்கா 7.5 புள்ளிகள், நியூசிலாந்து 4 புள்ளிகள், சிம்பாப்வே 3.5 புள்ளிகள்.

இதன்படி அவுஸ்திரேலிய அணி 'சுப்பர் சிக்ஸ்' சுற்றில் ஒரு போட்டியில் வெற்றி பெற்று விட்டால் அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறிவிடும். இந்தியா, கென்யா, சிறிலங்கா அணிகள் இரண்டு வெற்றிகளைப் பெறவேண்டும். மிகுதி இரு அணிகளான நியூசிலாந்து, சிம்பாப்வே அணிகள் நிர்ணயிக்கப்பட்ட மூன்று போட்டிகளிலும் வெற்றிபெறாத பட்சத்தில் அரையிறுதிக்கான வாய்ப்பை நினைத்துக் கூட பார்க்கமுடியாது.

இந் நிலையில் 'சுப்பர் சிக்ஸ்' ஆட்டங்கள் முதல் சுற்று ஆட்டங்களை விட விறுவிறுப்பாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# 17 கண்காணிப்புக் குழுக்கள் பாராளுமன்றில் அமைக்கப்படும்

## ஐ.தே.மு. அரசு முடிவு

பாராளுமன்றத்தில் பதினேழு கண்காணிப்புக் குழுக்களை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கும் அனைத்துக் கட்சித் தலைவர்களுடனும் பிரதமர் இந்தக் கண்காணிப்புக் குழுக்களை அமைப்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார் என்று அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைக் கூறினார்.

இந்தக் குழுக்களின் தலைவர்களாக எதிர்க்கட்சி உறுப்பினர்களே நியமிக்கப்படுவர். அமைச்சர்களும், பிரதி அமைச்சர்களும் இந்தக் குழுவில் இடம்பெறமாட்டார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## திருமலை....

பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த சகல பொலிசாரையும் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறு சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தருக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த மரண விசாரணையின் போது 46 சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ளனர்.

எம்.எஸ்.எவ்

மிக முக்கியமான திருத்தம்

சிறிலங்காவை விட்டு எம்.எஸ்.எவ் (F பிரான்ஸ்) மட்டுமே வெளியேறுகிறது. எம்.எஸ்.எவ் (ஒல்லாந்து) இன் மருத்துவ சேவை வன்னியில் தொடர்ந்தும் நடைபெறும்.

**மல்லாவியில் சித்திரை 1ஆம் திகதி வரை.**
**வவுனியா, புதுக்குடியிருப்பு 2003ஆம் ஆண்டு வரை.**

(3003)

பரீட்சை வழிகாட்டல் கருத்தமர்வு

**"தமிழீழ மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில்" வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிமனையால் நடாத்தப்படும்....**

**க.பொ.த. உயர்தரம் - 2003 கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான விசேட செயன்முறைக் கருத்தமர்வு.**

| காலம் | இடம் |
| --- | --- |
| 08, 09-03-2003 | மு/புதுக்குடியிருப்பு ம.வி. |
| 10, 11-03-2003 | கிளி/இந்துக் கல்லூரி. |

**இக்கருத்தமர்வானது காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். இதில் கலந்து பயன்பெறும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**

(3004) **- தமிழீழ மாணவர் அமைப்பு -**

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் 07-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.